சுற்றறிக்கை 2019/03

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்,
வடக்கு மாகாண சபை.
2019.08.29.

சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கும்,

**கூட்டுறவுச் சங்கங்கள் நன்கொடையாக பெற்றுக்கொள்ளும் சொத்துக்களுக்கு பெறுமானத்தேய்வு கணிப்பிடல்.**

கூட்டுறவுச் சங்கங்கள் அரசிடமிருந்தும், அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்தும் நன்கொடையாக சொத்துக்களை பெற்றுக்கொள்ளும் போது கூட்டுறவுச் சட்ட ஏற்பாடுகளுக்கமைய பதிவாளரின் அனுமதி பெற்றுக்கொள்ளப்படவேண்டும். அதாவது 1983 ஆம் ஆண்டு 32 ஆம் இலக்கத்தையும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கத்தையும் கொண்ட கூட்டுறவுச் சங்கத் திருத்தச் சட்டங்களுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் 60அ(1)அ பிரிவிலும், 33 வது பிரிவிலும், 1973ஆம் ஆண்டின் கூட்டுறவுச் சங்க விதி 48 (ii) பிரிவிலும், துணைவிதியிலும் நன்கொடை மூலமாக பெறுவதற்கு முன்னனுமதி பெறப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. எனவே உரிய அனுமதிகள் பெறப்பட்டுள்ளதா என்பதை கணக்காய்வாளர் உறுதிப்படுத்தல் வேண்டும்.

நன்கொடை வழங்கும் நிறுவனத்தால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை நன்கொடை பெற்ற நிறுவனம் பூர்த்தி செய்ததன் பின்னர் அந் நன்கொடை பணமல்லாச் சொத்தாக காணப்படுமிடத்து (Non Monetary Grant)அந் நிறுவனத்தின் கணக்கேடுகளில் அதனை உட்படுத்தும்போது கணக்குவைப்புக்களை பின்வரும் வழிகளில் மேற்கொள்ளலாம் என இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமம் - 20(LKAS - 20) கூறுகின்றது.

1. பெற்ற நன்கொடையினை அந்நிதியாண்டிலேயே வருமானமாகவும், மதிப்பிழிவாகவும் கணிப்பீட்டுக் கணக்குகளில் உட்படுத்தல்
2. சொத்தின் உறுதிப்படுத்தப்பட்ட ஆயுட்காலத்திற்கு ஏற்ப நன்கொடைத் தொகையினை பிரித்து ஒவ்வொரு நிதியாண்டிலும் வருமானமாக கணிப்பிட்டு கணக்குகளில் உட்படுத்தல்.
3. நன்கொடையானது பணமாக கிடைக்கப்பெறின் நன்கொடைக்கான நிபந்தனைகளை பூர்த்திசெய்ததன் பின்னர் அந்நிதியாண்டே நன்கொடை வருமானமாக கணிப்பிட்டு கணக்குகளில் உட்படுத்தல் வேண்டும்.

மேற்படி முறைகளில் இரண்டாவது முறையே கூட்டுறவுச் சங்கங்களுக்கு பொருத்தமானதாக அமையும், சொத்தின் கொள்வனவுப் பெறுமதிக்கமைய பெறுமானத்தேய்வு செய்யும்போது அவை ~~நடப்பு வருடத்தில் உழைத்த இலாபத்தைப் பாதிப்பதாக அமையும். எனவே சொத்தின்~~ உறுதிப்படுத்தப்பட்ட ஆயுட்காலத்திற்கு ஏற்ப நன்கொடைத் தொகையினை பிரித்து ஒவ்வொரு நிதியாண்டிலும் வருமானமாக கணிப்பிட்டு கணக்குகளில் உட்படுத்தல் பொருத்தமானதாகும்.

அதாவது கூட்டுறவுச் சங்கங்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட நன்கொடை தொடர்பில் அவற்றின் ஆயுட் காலம் தொடர்பிலும் தகைமைவாய்ந்த அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கையைப் பெற்று சொத்தின் வினைத்திறமையான பாவனைக்காலத்தை வரையறுத்து பின்வரும் முறையிலான கணக்குவைத்தல் பொருத்தமானதாகும்.

1. சொத்துக்கள் நன்கொடையாக பெறும் போது

சொத்துக்கள் கணக்கு - வரவு
நன்கொடைக் கணக்கு - செலவு
(நன்கொடை சொத்துக்குரிய பெறுமதி கணக்கு வைக்கும் போது)

2. வருமானமாக கணக்கிடும் போது

நன்கொடை கணக்கு - வரவு
நன்கொடை வருமானக் கணக்கு - செலவு
(நன்கொடை பெறுமதிக்குரிய சொத்திற்கு மதிப்பிழிவு தொகையால் வருமானமாகக் கணக்கு வைக்கப்படுகின்றது)

3. குறித்த சொத்தின் மதிப்பிழிவு கணக்கிடும் போது

மதிப்பிழிவுக் கணக்கு - வரவு
சொத்து கணக்கு - செலவு
(நன்கொடை பெறுமதிக்குரிய சொத்திற்கு மதிப்பிழிவு தொகையால் கணக்கு வைக்கப்படுகின்றது)

எனவே கூட்டுறவுச் சங்கங்கள் கணக்குவைக்கும் போது இச் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள ஒழுங்குமுறைக்கமைய கணக்குப்பதிவை மேற்கொள்வதற்குரிய அறிவுறுத்தல் வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். .இச் சுற்றறிக்கையானது 2019.09.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.

பொ.வாகீசன்,
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரும்,(வ.மா)

பிரதி - பணிப்பாளர் - கூட்டுறவுப் பயிற்சி நிறுவனம் - வவுனியா.